உ

சிவமயம்

ஆயாக்கடவை சித்திவிநாயகர் துணை



யாழ் புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும்,
இலண்டனை இறுதிக்கால வதிவிடமாகவும் கொண்ட

திரு மாணிக்கம் இராசையா அவர்கள்

இறைபதமடைந்தமையை ஒட்டி வெளியிடப்பட்ட

நினைவு மலர்

09.05.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

அமரர் திரு மாணிக்கம் இராசையா அவர்கள்



மண்ணுலகு
26.04.1930

வானுலகு
06.04.2009

திதி வெண்பா

ஆண்டு சர்வதாரி அமைந்த பங்குனியில்
பூண்ட பூர்வபக்க துவாதசியில்—மாண்பு
சீரிலங்கு இராசையா சிற்றின்ப வாழ்வேகி
பேரின்பப் பேறடைந்தான் காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம், புன்னாலைக்கட்டுவன் தெற்கு
திரு மாணிக்கம் இராசையா அவர்களின் வாழ்க்கைச் சரிதம்

யாழைக் கொணர்ந்திங்கு மீட்டியதால் ஒரு யாசகன்,
மன்னனிடம் இருந்தோர் பாலைப் பரிசு பெற்றான் எனக்கூறிடும்
பண்டைப் பழங்கதை கேட்டதுண்டு. பாலைப்பரிசு பெற்றாலும்
அப்பாலையைப் பச்சைப்படுத்தி பயன் விளைத்து
வாழத் தொடர்ந்து முயன்றதனால் இன்று

வையத்துயர்ந்தது யாழ்ப்பாணம் என்று மஹாகவி து. உருத்திரமூர்த்தி அவர்கள் யாழ்ப்பாணத்தைப் பற்றிப் பாடினார்.

பாலையாய் இருந்த யாழ்ப்பாணத்தை பச்சைப் பசேலென்ற மருத நிலமாக மாற்றியவர்கள் விவசாயிகள். இப்பாரம்பரியத்தில் நிறைந்த ஊரே புன்னாலைக்கட்டுவன். இங்கு மாலான முதலியார் வழித்தோன்றலில் மாணிக்கம் சின்னத்தங்கம் தம்பதிகளின் மூன்றாவது மகவாக இராசையா 26.04.1930 இல் பிறந்தார். கந்தசாமிப்பிள்ளை, தங்கம்மா ஆகியோர் இவரது உடன்பிறப்புக்கள். இவர் புன்னாலைக் கட்டுவன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் தனது கல்வியை முடித்த பின்னர் தனது தந்தையாருக்கு உதவியாக விவசாயத்தில் ஈடுபட்டார்.

ஆயாக்கடவை சித்தி விநாயகரைக் குலதெய்வமாக வழிபட்ட திரு மாணிக்கம், உரிய வயதில் மறவன்புலவை பொன்னம்பலம் வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மகள் சுந்தரவல்லியை மணம் முடித்தார். திருமணத்தின் பின்னர் விவசாயத்தில் பெருலாபம் ஈட்டியது தனக்கு மனைவி வந்த யோகமெனக் கருதி மனைவியை யோகம் என காதலால் அழைத்து வந்தார்.

இவர்களின் இன்ப வாழ்வின் வெளிப்படுத்தலாய் 1962ம் ஆண்டு ஆண்மகவொன்று பிறந்தது. மூல நட்சத்திரத்தில் பிறந்த காரணத்தால் அம்மகவுக்குத் திருஞானசம்பந்தமூர்த்தி எனப்பெயரிட்டு வளர்த்து வந்தனர. உரிய வயதில் தான் கல்வி கற்ற புன்னைக்கட்டுவன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் தனது மகனையும் இணைத்து முறையான ஆம்பக்கல்வியை ஊட்டினார்.

மகனின் கல்வியிலும் வளர்ச்சியலும் புளகாங்கிதமடைந்து இடைநிலைக்கல்வி கற்பதற்காக தெல்லிப்பழை மஹாஜனக்கல்லூரியில் அனுமதித்தார். கல்வியிலும் விளையாட்டிலும் மிகுந்த சிறப்புப்பெற்று தனது மகன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவானது குறிதது்ப் பெருமிதம் கொண்டார்.

கல்வியிலும் விளையாட்டிலும் பெருவிருப்புக் கொண்டிருந்த மகனைச் சமூக அக்கறை கொண்டவராகவும் வளர்த்தார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானமாணி(B.Sc) பட்டம் பெற்ற ஒரே மகனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லண்டனுக்கு உயர்கல்வி கற்பதற்காக அனுப்பிவைத்தார். இங்கு கற்றுத் தேறி பொறியியலாளராகப்பணி புரியும் திருஞானசம்பந்தமூர்த்தியை நண்பர்கள் சம்பந்தன் என்று விருப்புடன் அழைப்பர். காலாகாலத்தில் சம்பந்தனுக்கு சுன்னாகம் தெற்கைச் சேர்ந்த கனகரத்தினம் செல்லம்மா தம்பதிகளின் செல்வப்புதல்வி சுமதியை மணம முடித்து வைத்தார்கள். இவர்களின் இல்லறத்தின் பேறாய் சுலோசன் பிறந்தான்.

பேரன் பிறந்ததை எண்ணிப் பூரித்திருந்த வேளையில் மனைவி சுந்தரவல்லியை கொடிய புற்றுநோய் தாக்கியது. 17.09.1997இல் யோக மௌன ஆசையாக அழைத்து வந்த மனைவி சுந்தரவல்லி காலமானார். தனிமையும் பெருந்துயரும் வாட்ட 25.10.1998இல் தனது கடைசிக் காலத்தை மகனுடனும் மருமகளுடனும் பேரக்குழந்தையுடனும் களிக்க லண்டனுக்கு வந்து சேர்ந்தார்.

லண்டனுக்கு வந்ததன் பின் அனுஜன் என்னும் பேரனும், கிருத்திகா என்னும் பேத்தியும் பிறந்தார்கள். பேரக்குழந்தைகளின் மழலையும் குறும்பும் இராசையா அவர்களின் தனிமையைப் போக்கிற்று. வாழ்க்கை இன்ப வெள்ளமாயிற்று. குகதாசன் குடும்பத்தினரும் இருந்தமை அவரது மகிழ்ச்சியை அதிகப்படுத்தியது. மருமகள் சுமதி தந்தைக்கு மேலாக அன்பு செலுத்தி திரு இராசையா அவர்களைக் கவனித்தார்.

இதே காலப்பகுதியில் மகன் சம்பந்தன் மகாஜனாக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் விளையாட்டுத்துறைச செயலாளராக பல்லாண்டு காலம் பணியாற்றி தற்போது அதன் செயலாளராக நான்காண்டுகளாக பெரும்பணியாற்றி வருகின்றார். பேரன்கள் இருவரும் மகாஜனா உதபந்தாட்ட கிறிக்கெட் அணிகளில் சிறப்பாக ஆடி பல சம்பியன் கிண்ணங்களை வென்று வருவதைக் கண்டு உள்ளம் பூரித்தவராய் வாழ்ந்து வந்தார்.

வாழ்க்கையின் எந்தக் காலத்திலும் வைத்தியசாலைக்குச் சென்றிருக்காத திரு இராசையா அவர்கள் வீட்டினில் தடுக்கி விழுந்து 28.04.2009 அன்று முதல் எலும்பு முறிவு சிகிச்சைக்காக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அதுவே கடைசியாகவும் ஆயிற்று. 06.04.2009இல் மகனைப் பார்த்து கைகூப்பிய பின்னர் இறுதி விடை பெற்றார்.

அன்று பிறந்து, இன்று இறப்பதுள்
ஆயதன்று நம் மானிட வாழ்வு காண்
அப்பனே மகனாகி வளர்ந்து
உயிர் ஓய்தல் அற்று உயர்வு ஒன்றினை
நாடலே உண்மை - மஹாகவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. வரதபண்டிதர் அவர்கள் இயற்றிய

பிள்ளையார் கதை

காப்பு

கரும்பும் இளநீருங் காரெள்ளுந் தேனும்
விரும்பும் அவல்பலவும் மேன்மேல் - அருந்திக்
குணமுடைய னாய்வந்து குற்றங்கள் தீர்க்குங்
கணபதியே இக்கதைக்குக் காப்பு.

திருவிளக்கு மான்மருகா சேவதனில் ஏறி
வரும் அரன்றான் ஈன்றருளும் மைந்தா - முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவா உனைத்தொழுவேன்
என்கதைக்கு நீஎன்றுங் காப்பு

விநாயர் துதி

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமு கத்தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை.

ஒற்றை மருப்பும் ஓரிரண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழிமூன்றும் - பெற்றதொரு
தண்டைக்கால் வாரணத்தைத் தன்மனதில் எப்பொழுதுங்
கொண்டக்கால் வாராது கூற்று.

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துஉனக்கு நான்தருவேன் - கோலம்செய்
தூங்கக் கரிமுகத்துத் தூமணியே நீஎனக்கு
சங்கத் தமிழ்மூன்றுந் தா.

சப்பாணி

எள்ளு பொரிதேன் அவல்அப்பமிக்கும் பயறும் இளநீரும்
வள்ளிக் கிழங்கும் மாம்பழமும்,வாழைப்பழமும், பலாப்பழமும்
வெள்ளைப்பாலும், மோதகமும் விரும்பிப்படைத்தேன் சந்நிதியில்
கொள்ளைக் கருணைக் கணபதியேகொட்டி அருள்க சப்பாணி

சண்டப் பெருச்சாளி ஏறிச் சடைகொண்டு வையத் துலாவி
அண்டத்து அமரர் துதிக்க அடியார்க்கு அருளும் பிரானே,
எண்திக்கும் அன்பர்கள் பார்க்க இணையற்ற பேரொளி வீசக்
குண்டைக் கணபதி நம்பி கொடுங்கையாற் சப்பாணி கொட்டே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரஸ்வதி துதி

புத்தகத் துள்ளுறை மாதே பூவில் அமர்ந்திடு வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளைாய் நங்காய் வேதப் பொருளுக்கு இறைவீ
முகத்தின் குடைஉடையாளே மூவுல குந்தொழுது ஏத்துஞ்
செப்புக் கவித்த முலையாய் செவ்வரி ஓடிய கண்ணாய்
தக்கோலந் தின்னும் வாயாய் சரஸ்வதி என்னுந் திருவே
எக்காலமும் உன்னைத்தொழுவேன்இயல் இசை நாடகம் என்னும்
முத்தமிழ்க் கல்விகள் எல்லாம் முழுதும் எனக்குருள் செய்துஎன்
சித்தந் தனில்நீ இருந்து திருவருள் செய்திடு வாயே

அதிகாரம்

பொன்னிறங் கடுக்கும் புனற்செறி குடுமித்
தென்மலை இருந்த சீர்சால் முனிவன்
கந்த மும்மதக் கரிமுகன் கதைதனைச்
செந்தமிழ் வகையால் தெளிவுறச் செப்பினன்
அன்னதிற் பிறவில் அரில்தபத் திரட்டி
தொன்னெறி விளங்கச் சொல்லுவன் கதையை.

கதை

மந்திர கிரியில் வடபால் ஆங்குஓர்
இந்துதவழ் சோலை இராசமா நகரியில்
அந்தணண் ஒருவனும் ஆயிழை ஒருத்தியுஞ்
சுந்தரப் புதல்வரைப் பெறுதல் வேண்டிக்
கடவுள் ஆலயமுங் கடிமலர் பொய்கையும்
தடநிழற் பள்ளியுந் தாம்பல சமைத்துப்
புதல்வரைத் தருகெனப் பொருப்புஅரசு ஈன்ற
மதர்விழி பாகனை வழிபடும் நாளில்
மற்றவர் புரியும் மாதவங் கண்டு
சிற்றிடை உமையாள் சிவன்அடி வணங்கிப்
பரனே சிவனே பல்லுயிர்க்கு உயிரே
அரனே மறையவர்க்கு அருள்புரிந்து அருளென
அந்தஅந் தணனுக்கு இந்தநற் பிறப்பில்
மைந்தரில் லைஎன்று மறுத்துஅரன் உரைப்ப
எப்பாசு ஆயினும் எம்பொருட்டு ஒருசுதன்
தப்பில்லா மறையோன் தனக்கருள் செய்கென
எமைஆ ளுடைய உமையாள் மொழிய
இமையா முக்கண் இறைவன் வெகுண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்சொற் கேட்டல் பேதமை என்று
பண்சொற் பயிலும் பாவையை நோக்கிப்
பேதாய் நீபோய்ப் பிறஎன மொழிய
மாதுமை அவளும் மனந்தளர்வு உற்றுப்
பொன்றிடும் மானிடப் புன்பிறப்பு உய்துதல்
நன்றல என்றே நடுக்கமுற்று உரைப்பக்
கறைமிடற்று அண்ணல் கருணை கூர்ந்து
பிறைநுதல் அவட்குநீ பிள்ளை யாகச்
சென்றுஅவண் வளர்ந்து சிலபகல் கழித்தால்
மன்றல்செய்து அருள்வோம் வருந்தலை என்று
விடைகொடுத்து அருள விலங்கல்மா மகளும்
பெடைமயிற் சாயற் பெண்மக வுஆகித்
தார்மலி மார்பன் சதுர்மறைக் கிழவன்
சீர்மலி மனைவி திருவயிற்று உதித்துப்
பாவையுஞ் சிற்றிலும் பந்தொடு கழங்கும்
யாவையும் பயின்ற இயல்பினள் ஆகி
ஐயாண்டு அடைந்தபின் அன்னையும் அத்தனும்
மையார் கருங்குழல் வாணதல் தன்னை
மானுட மறையோர்க்கு வதுவைக்கு செய்திடக்
கான்அமர் குழலியைக் கருதிக் கேட்பப்
பிறப்புஇறப்பு இல்லாப் பெரியோற்கு அன்றி
மற்றவன் தன்னைஉன் மணமக னாகப்
பெற்றிடல் அரிதெனப் பெயர்த்துஅவர் பேச
அருந்தவ முயற்சியால் அணுகுவேன் யான்எனக்
கருந்தட நெடுங்கண் கவுரிஅங்கு உரைப்ப
மருமலி கமல மலர்த்தடத்து அருகில்
தருமலி நிழல்தவச் சாலையது அமைத்துப்
பணியணி பற்பல பாங்கியர் சூழ
அணிமலர்க் குழல்உமை அருந்தவம் புரிதலும்
அரிவை தன்அருந்தவம் அறிவோம் யாம்என
இருவரும் அறியா இமையவர் பெருமான்
மான்இடம் ஊந்தும் வண்ணமது ஒழிந்து
மானிட யோக மறையவன் ஆகிக்
குடையொடு தண்டுநற் குண்டிகை கொண்டு
மடமயில் தவம்புரி வாவிக் கரையிற்
கண்ணுதல் வந்து கருணை காட்டித்
தண்நறுங் கூந்தல் தையலை நோக்கி
மின்பெறு நுண்இடை மெல்லிய லாய்நீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பெறத் தவம்இங்கு இயற்றுவது என்றலுங்
கொன்றைவார் சடையனைக் கூடஎன்று உரைத்தலும்
நன்றுஎனச் சிரித்து நான்மறை யோனும்
மாட்டினில் ஏறி மான்மழு தரித்துக்
காட்டினிற் சுடலையிற் கணத்துடன் ஆடிப்
பாம்பும் எலும்பும் பல்தலை மாலையுஞ்
சாம்பரும் அணிந்து தலையோடு ஏந்திப்
பிச்சைகொண்டு உழலும் பித்தன் தன்னை
நச்சிநீர் செய்தவம் நகைதரும் நுமக்கெனப்
பூங்கொடி அருந்தவம் பூசுரன் குலைத்தலும்
ஆங்குஅவள் நாணமுற்று அணிமனை புகுதச்
சேடியர் வந்து செழுமரலர்க் குழலியை
வாடுதல் ஒழிகென மனம்மிகத் தேற்றிச்
சிந்துர வாள்நுதற் சேடியர் சிலர்போய்த்
தந்தைதாய் இருவர் தாளினை வணங்கி
வாவிக் கரையில் வந்துஒரு மறையோன்
பாவைதன் செங்கையைப் பற்றினன் என்றலுந்
தோடுஅலர் கமலத் தொடைமறை முனியை
ஆடக மாடத்து அணிமனை கொணர்கஎன
மாடக யாழ்முரல் மங்கையர் ஓடி
நீடிய புகழாய் நீஎழுந்து அருள்என
மைமலர்க் குழலி வந்துஉனை அழைக்கில்
அம்மனைப் புகுவன்என்று அந்தணன் உரைத்தலும்
பொற்றொடி நீபோய்ப் பொய்கையில் நின்ற
நற்றவ முனியை நடாத்திக் கொணர்கென
சிவனை இகழ்த சிற்றறிவு உடையோன்
அவனையான் சென்றுஇங்கு அழைத்திடேன் என்று
சிற்றிடை மடந்தையுஞ் சீறின ளாகி
மற்றைய மாதர் மதிமுகம் நோக்கி
நெற்றியிற் கண்ணுடை நிமலனுக்கு அல்லவென்
பொற்புஅமர் கொங்கை பொருந்துதற்கு அரிதால்
மானிட வேட மறையவன் தனக்கு
யான்வெளிப் படுவ தில்லைஎன்று இசைப்ப
மனையிடை வந்த மாமுனி தன்னை
இணைஅடி தொழுதல் இளையோர்க்கு இயல்பெனத்
தந்தையுந் தாயுந் தகைபெற மொழியச்
சிந்தை குளிர்ந்து சீறுதல் ஒழிந்து
தாய்சொல் மறுத்தல் பாவம்என்று அஞ்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிழை தானும் அவன்எதிர் சென்று
சுற்றிவந்து அவனடி சுந்தரி வணங்கி
மற்றவன் தன்னை மனையிற் கொணர்ந்து
ஆதியம் பகவற்கு அன்பன் ஆகும்
வேதியன் பழைய விருத்தன் என்று எண்ணி
ஆசனம் நல்கி அருக்கியம் முதலாப்
பாதபூ சனைகள் பண்ணிய பின்னர்ப்
போனகம் படைத்துப் பொரிக்கறி பருப்புநெய்
ஆன்பால் மாங்கனி அழகிய பலாச்சுளை
தேன்கத லிப்பழஞ் சீர்பெறப் படைத்து
அந்தணன் தன்னை அமுது செய்வித்துச்
சந்தனங் குங்குமச்சாந்திவை கொடுத்துச்
தக்கோ லத்தொடு கவின்பெறக் கொண்டு
வெள்ளிலை அடைக்காய் விளங்கிய பொன்னின்
ஒள்ளிய தட்டில் உவந்துமுன் வைத்துச்
சிவன்எனப பாவனை செய்து நினைந்து
தவமுறை முனிவனைத் தாளிணை வணங்கத்
தேன்அமர் குழலி திருமுகம் நோக்கி
மோனமா முனிபுன் முறுவல் காட்டித்
கற்றைச் சடையுங் கரமொரு நான்கும்
நெற்றியில் நயனமும் நீல கண்டமும்
மானும் மழுவும் மலர்க்கரத்து இலங்கக்
கூன்மதி நிலவுங் கொழித்திட முடிமேல்
வரந்தரு முதல்வன் மடமயில் காணக்
கரந்தனன் உருவங்காட்டி முன்நிற்ப
மரகத மேனி மலைமகள் தானும்
விரைவோடுஅங் குஅவன்அடி வீழ்ந்துஇறைஞ் சின்னே
அரிஅயன் இந்திரன் அமரர் விஞ்சையர்
கருடர் கின்னர் காய வாசியர்
ஏதமில் முனிவர் அவுணர் இராக்கதர்
பூதர் இயக்கர்கிம் புருடர் அலகை
சித்தர் தாரகைகந் தருவர்கள் முதலாய்
கணிக்கரும் பதினெண் கணத்தில்உள் ளவரும்
மணிக்கருங் களத்தனை வந்தடைந்து அதன்பின்
மனறல்அங் குழலிக்கு வதுவைநாள் குறித்துத்
தென்றல்வந்து இலக்கு முன்றில் அகத்துப்
பொன்திகழ் பவளப் பொற்கால் நாட்டி
மாணிக் கத்தால் வளைபல பரப்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணிப்பொன் தகட்டால் அழகுற வேய்ந்து
நித்தில மாலை நிரைநிரை தூக்கிப்
பக்திகள் தோறும் பலமணி பதித்துப்
தோரணம் நாட்டித் துகில்விதா னித்துப்
பூரணப் பொற்குடம் பொலிவுற வைத்துத்
திக்குத் தோறுந் திருவிளக்கு ஏற்றிப்
பத்திப் படர்முளைப் பாலிகை பரப்பிக்
கன்னலுங் கமுகுங் கதலியும் நாட்டிப்
பன்மலர் நாற்றிப் பந்தர்சோ டித்து
நலமிகு கைவலோர் நஞ்சுஅணி மிடற்றனைக்
குலவிய திருமணக் கோலம் புனைந்தார்
வருசுரர் மகளிர் மலைமகள் தன்னைத்
திருமணக் கோலம் செய்தனர் ஆங்கே
எம்பிரா னையும் இளங்கொடி தன்னையும்
உம்பர் எல்லாம் ஒருங்குடன் கூடிச்
கடல்என விளங்குங் காவணந் தன்னிற்
சுடர்விடு பவளச் சுந்தரப் பலகையில்
மறைபுகழ்ந்து ஏத்த மகிழ்ந்துஉட னிருத்திப்
பறைஒலி யோடு பனிவளை ஆர்ப்ப
வதுவைக்கு ஏற்ற மறைவிதி நெறியே
சதுர்முகன் ஓமச் சடங்குகள் இயற்றத்
தறுகலன் ஒளிபொன் தாலி பூட்டிச்
சிறுமதி நுதலியைச் சிவன்கைப் பிடித்தபின்
அரிவலஞ் சூழ எரிவலம் வந்து
பரிவுடன் பரிமளப் பாயலில் வைகிப்
போதுஅணி கருங்குழற் பூவைதன் உடனே
ஓதநீர் வேலைசூழ் உஞ்சைஅம் பதிபுக
ஏரார் வழியின் எண்திசை தன்னைப்
பாரா தேவா பனிமொழி நீஎன
வரும்கருங் குழலால் மற்றும்உண் டோஎனத்
திருத்துஇழை மடந்தை திரும்பினள் பார்க்கக்
களிறும் பிடியும் கலந்துவிளை யாடல்கண்டு
ஒளிர்மணி பூணாள் உரவோன் உடனே
இவ்வகை யாய்விளை யாடுவோம் ஈங்கென
அவ்வகை அரனும் அதற்குஉடன் பட்டு
மதகிரி உரித்தோன் மதகிரி யாக
மதர்விழி உமைபிடி வடிவம் தாகிக்
கூடிய கலவியிற் குவலயம் விளங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீடிய வானோர் நெறியுடன் வாழ
அந்தணர் சிறக்க ஆனினம் பெருகச்
செந்தழல் வேள்விவேத ஆகமஞ் சிறக்க
அறம்பல பெருக மறம்பல சுருங்க
திறம்பல அரசர் செகதலம் விளங்க
வெங்கரி முகமும் வியன்புழைக் கையொடு
ஐங்கர தலமும் மலர்பதம் இரண்டும்
பவளத்து ஒளிசேர் பைந்துவர் வாயுந்
தவளக் கிம்புரித் தடமருப்பு இரண்டுங்
கோடிசூ ரியர்போற் குலவிடு மேனியும்
பேழைபோல் அகன்ற பெருங்குட வயிறும்
நெற்றியில் நயனமும் முப்புரி நூலும்
கற்றைச் சடையுங் கனகநீள் முடியுந்
தங்கிய முறம்போல் தழைமடிச் செவியுமாய்
ஐங்கரத்து அண்ணல் வந்துஅவ தரித்தலும்
பொங்கரவு அணிந்த புண்ணிய மூர்த்தியும்
மங்கை மனமிக மகிழ்ந்து உடன் நோக்கி
விண்ணு ளோர்களும் விரிந்தநான் முகனும்
மண்ணு ளோர்களும் வந்துஉனை வணங்க
ஆங்குஅவர் தங்கட்கு அருள்கரந்து அருளித்
தீங்கது தீர்த்துச் செந்நெறி அளித்துப்
பாரண மாகப் பலகனி அருந்தி
ஏரணி ஆலின்கீழ் இனிதிரு என்று
பூதலந் தன்னிற் புதல்வனை இருத்திக்
காதல்கூர் மடநடைக் கன்னியுந் தானும்
மைவளர் சோலை மாநகர் புகுந்து
தெய்வ நாயகன் சிறந்துஇனிது இருந்தபின்
வானவராலும் மானுட ராலுங்
கான்அமர் கொடிய கடுவிலங் காலும்
கருவிக ளாலுங் கால னாலும்
ஒருவகை யாலும் உயிர்அழி யாமல்
திரம்பெற மாதவஞ் செய்துமுன் னாளில்
வரம்பெறு கின்ற வலிமையி னாலே
ஐமுகச் சீயமொத்து அடற்படை சூழக்
கைமுகம் படைத்த கயமுகத்து அவுணன்
பொன்னுலகு அழித்து புலவரை வருத்தி
இந்நிலத்தவரை இடுக்கண் படுத்திக்
கொடுந்தொழில் புரியுங் கொடுமைகண்டு ஏங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுந்தொழிற் குலிசத்து அண்ணலும் அமரருங்
கறைபடு கண்டக் கடவுளைப் போற்றி
முறையிடக் கேட்டு முப்புரம் எரித்தேன்
அஞ்சலீர் என்றுஅவர்க்கு அபயங் கொடுத்தே
அஞ்சுகைக் கரிமுத்து அண்ணலை நோக்கி
ஆனை மாமுகத்து அவுணனொடு அவன்தன்
சேனைகள் முழுவதுஞ் சிந்திடப் பொருது
குன்றுபோல் வளர்ந்த குறட்படை கூட்டி
வென்றுவா என்று விடைகொடுத்து அருள
ஆங்குஅவன் தன்னோடு அமர்பல உடற்றிப்
பாங்குறும் அவன்படை பற்றுஅறக் கொன்றபின்
தேர்மிசை ஏறிச் சினங்கொடு செருவிற்
கார்முகம் வளைத்த கயமுகா சுரன்மேல்
ஒற்றை வெண் மருப்பை ஒடித்துஅவன் உரத்திற்
குற்றிட எறிந்தான் குருதிசோர்ந் திடவே
சோர்ந்து அவன் வீழ்ந்து துண்ணென எழுந்து
வாய்ந்தமூ டிகமாய் சந்துஅவன் பொரவே
வந்த மூடிகத்தை வாகனம் ஆக்கி
எந்தை விநாயகன் ஏறினன் இப்பால்
எறிந்தவெண் மருப்புஅங்கு இமைநொடி அளவிற்
செறிந்தது மற்றவன் திருக்கரத் தினிலே
வெல்லவைக் கதிர்வேல் விழிப்படைந்து அருளும்
வல்லவை தனைத்தன மனைஎன மணந்தே
ஓகையொடு எழுந்துஆங்கு உயர்படை சூழ
வாகையும் புனைந்து வரும்வழி தன்னிற்
கருச்சங்கோட்டிற் கயல்கமுகு ஏறுந்
திருச்செங் காட்டிற் சிவனைஅர்ச் சித்துக்
கணபதீச் சரம்எனுங் காரண நாமம்
பணபதி புகழ்தரு பதிக்குஉண் டாக்கிச்
சங்கரன் பார்ப்பதி தனிமனம் மகிழ
இங்குவந்து அன்புடன் எய்திய பின்னர்க்
கணங்களுக்கு அரசாய்க் கதிர்முடி சூட்டி
இணங்கிய பெருமைபெற்று இருந்திட ஆங்கே
தேவர்கள் முனிவர்கள் சித்தர்கந் தருவர்
யாவரும் வந்துஇவண் ஏவல்செய் திடுநாள்
அதிகமாய் உரைக்கும் ஆவணித் திங்களின
மதிவளர் பக்கம் வந்திடு சதுர்த்தியில்
விநாயகருக்கு உரிய விரதம் என்றுஎண்ணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனாதிகள் கழித்து மரபொடு நோற்றார்
இப்படி நோற்றிட்டு எண்ணிய பெருநாள்
ஒப்பரும் விரதத்து உறும்ஒரு சதுர்த்தியில்
நோற்றுநற் பூசை நுடங்காது ஆற்றிப்
போற்றிசெய் திட்டார் புலவர் ஐங்கரனை
மருமலர் தூவும் வானவர் முன்னே
நிருமலன் குமரன் நிருத்தம் புரிந்தான்
அனைவரும் கைதொழுது அடிஇணை போற்ற
வனைகழற் சந்திரன் மனச்செருக்கு அதனால்
பேழைபோல் வயிறும் பெருத்தகாத் திரமும்
தாழ்துளைக் கையுந் தழைமுறச் செவியுங்
கண்டனன் நகைத்தான் கரிமுகக் கடவுளுங்
கொண்டனன் சீற்றங் குபேரனை நோக்கி
எனைக் கண்டுஇங்கு இகழ்ந்தனை சிரித்தாய்
உனைக் கண்டவர் உரைக்கும் இத் தினத்திற்
பழியொடு பாவமும் பலபல விதனமும்
அழிவும்எய் துவரென்று அசனிபோற் சபித்தான்
விண்ணவர் எல்லாம் மிகமனம் வெருவிக்
கண்ணருள் கூருங் கடவுள்இத் தினத்திற்
கோரவெஞ் சினமிக் கொண்டனன் அந்தநாள்
மார்கழித் திங்கள் மதிவளர் பக்கஞ்
சதயந் தொட்ட சட்டிநல் விரதமென்று
இதயத்து எண்ணி யாவரும் நோற்றார்
இப்புவி மாந்தர் இயம்பிய விரதம்
வைப்புடன் நோற்ற வகைஇனிச் சொல்வாம்
குருமணி முடிபுனை குருகுலத் துதித்த
தருமனும் இளைய தம்பியர் நால்வருந்
தேவகி மைந்தன் திருமுகம் நோக்கி
எண்ணிய விரதம் இடையூறு இன்றிப்
பண்ணிய பொழுதே பலிப்பு உண்டாகவுஞ்
செருவினில் எதிர்த்த செறுநரை வென்று
மருமலர்ப் புயத்தில் வாகை சூடவும்
எந்தத் தெய்வம் எவ்விர தத்தை
வந்தனை செய்யில் வருநமக்கு உரையெனப்
பாட்டுஅளி துதையும் பசுந்துழாய் மார்பனுங்
கேட்டருள் வீரனைக் கிளத்துதல் உற்றான்
அக்குநீ றணியும் அரன்முதல் அளித்தோன்
விக்கினந் தீர்க்கும் விநாயக மூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடவைத் திடும்பொன் ஒத்துஒளி விளங்குங்
கோடி சூரியர்போற் குலவிய மேனியன்
கடகரி முகத்தோன் காத்திரம் பெருத்தோன்
தடவரை போலுஞ் சதுர்ப்புயம் உடையோன்
சர்வ ஆபரணமுந் தரிக்கப் பட்டவன்
உறுமதிக் குழவிபோல் ஒருமருப்பு உடையோன்
ஒருகையில் தந்தமும் ஒருகையிற் பாசமும்
ஒருகையில் மோதகம் ஒருகையிற் செபஞ்செய்
உத்தம மாலையோன் உறுநினை வின்படி
சித்திசெய் வதனாற் சித்திவி நாயகன்
என்றுஇமை யவரும் யாவருந் துதிப்ப
நன்றி தருந்திரு நாமம் படைத்தோன்
புரவலர் காணப் புறப்படும் போதுஞ்
செருவினில் யுத்தஞ் செய்திடும் போதும்
வித்தியா ரம்பம் விரும்பிடும் போதும்
உத்தியோகங்கள் உஞற்றிடும் போதும்
ஆங்குஅவன் தன்னை அருச்சனை புரிந்தால்
தீங்குஉறாது எல்லாஞ் செயம்உண் டாகும்
கரதலம் ஐந்துடைக் கணபதிக்கு உரிய
விரதம்ஒன் றுஉளதுஅதை விரும்பிநோற் றவர்க்குச்
சந்ததி தழைத்திடுஞ் சம்பத்து உண்டாம்
புந்தியில் நினைந்த பொருள்கை கூடும்
மேலவர் தம்மையும் வென்றிடலாமெனத்
தேவகி மைந்தன் செப்பிடக் கேட்டு
நுவலரும் விரதம் நோற்றிடும் இயல்பு
புகர்முகக் கடவுளைப் பூசைசெய் விதமும்
விரிதிது எமக்கு உரைத்திட வேண்டும் என்று இரப்ப
வரைக்குடை கவிததோன் வகுத்து உரை செய்வான்
தேருநீர் ஆவணித் திங்களில் மதிவளர்
பூர்வ பக்கம் புணர்ந்திடு சதுர்த்தியின்
முந்தும் புலரியின் முறைநீர் படிந்து
சந்தி வந்தனந் தவறாது இயற்றி
அத்தினம் அமதில் ஐங்கரக் கடவுளை
பக்தியோடு அர்ச்சனை பண்ணுதல் வேண்டும்
வெள்ளியால் பொன்னால் விளங்கும் அவன்றன்
ஒள்ளிய அருள்திரு உருஉண்டாக்கிப்
பூசனை புரியப் புகன்றனர் பெரியோர்
ஆசுஇலா மண்ணால் அமைத்தலும் தகுமால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசைசெய் திடும் இடம்புனிதமது ஆக்கி
வாசமென் மலரின் மஞ்சரி தூக்கிக்
கோடிகங் கோசிகங் கொடிவிதா னத்து
நீடிய நூல்வளை நிறைகுடத்து இருத்தி
விந்தைசேர் சித்தி விநாயகன் உருவைச்
சிந்தையின் நினைத்து தியானம் பண்ணி
ஆவாகனம்முதல் அர்க்கிய பாத்தியம்
வாகா ராவ மனம்வரை கொமுத்து
ஐந்துஅமிர் தத்தால் அபிடே கித்துக்
கந்தஞ் சாத்திக் கணேசமந் திரத்தால்
ஈசுர புத்திரன் என்னும்மந் திரத்தால்
மாசுஅகல் இரண்டு வத்திரஞ் சாத்திப்
பொருந்துஉமை சுதனாகப் புகலுந் திரத்தால்
திருந்தும் பளிதத் தீபங் கொடுத்துப்
பச்சறுகு உடன்இரு பத்தொரு விதமாப்
பத்திர புட்பம் பலபல கொணர்ந்தே
உமாசுதன் கணாதிபன் உயர்கிரி முகத்தோன்
குமார குரவன் காசஅங் குசகரன்
ஏக தந்தன் ஈசுவரன் புத்திரன்
ஆகு வாகனன் அருள்தரு விநாயகன்
சர்வகா ரியமுந் தந்துஅருள் புரிவோன்
ஏரம்ப மூர்த்தி என்னும்நா மங்களால்
ஆரம் பத்துடன் அர்றுசனை பண்ணி
மோதகம் அப்பம் முதற்பணி காரந்
தீதகல் மாங்கனி தீங்கத லிப்பழம்
வருக்கை கபித்த மாதுளங் கனியோட
தரித்திடு நெட்டிலைத் தாழைமுகப் புடைகாய்
பருப்பு நெய் பொரிக்கறி பால்தயிர் போனகம்
விரும்புள சுவைப்பொருள் மிகவும்முன் வைத்து
உரித்தமிரப் பிரியஎன்று உரைக்கும்மந் திரத்தால்
நிருத்தன் மகற்கு நிவேதனங் கொடுத்து
நற்றவர் புகன்றநா னான்குஉப சாரமும்
மற்றவன் திருவுளம் மகிழ்திடச் செய்து
எண்ணுந் தகுதி இருபிறப் பாளர்க்கு
உண்அறு சுவைசேர் ஓதனம் நல்கிச்
சந்தனம் முத்துத் தானந் தக்கிணை
அந்தணர்க்கு ஈந்திட்ட அருச்சகன் தனக்குத்
திருத்தகு விநாயகத் திருவுரு வத்தைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரித்தவத் திரத்துடன் தானமாகக் கொடுத்து
நைமித் திகம்என நவில்தரு மரபால்
இம்முறை பூசனை யாவர்செய் தாலும்
எண்ணிய கருமம் யாவையும் முடிப்பர்
திண்ணிய செருவிற் செயம்மிகப் பெறுவர்
அரன்இவன் தன்னைமுன் அர்ச்சனை பண்ணிப்
புரம்ஒரு மூன்றும் பொடிபட எரித்தான்
உருத்திரன் இவனை உபாசனை பண்ணிப்
விருத்திரா சுரனை வென்றுகொன் றிட்டான்
அலிகை அவன் தாள் அர்ச்சனை பண்ணிப்
பகர்தருங் கணவனைப் பரிவுடன் அடைந்தாள்
தண்ஆர்ட மதிமுகத் தாள்மதம யந்தி
அன்னாள் இவனை அர்ச்சனை பண்ணி
நண்ணார் பரவும் நளனை அடைந்தாள்
ஐங்கரக் கடவுளை அர்ச்சனை பண்ணி
வெங்கத நிருதரை வேர்அறக் களைந்து
தசரதன் மைந்தன் சீதையை அரைந்தான்
பகிரதன் என்னும் பார்திபன் இவனை
மகிலதந் தன்னில் மலர்கொடு அர்ச் சித்து
வரநதி தன்னை வையகத்து அழைத்தான்
அட்ட போகத்துடன் அமிர்தமும் பெற்றார்
உருக்குமணி என்னும் ஒண்டொடி தன்னைச்
செருக்கொடு வவ்விச் சிசுபா லன்றான்
கொண்டுபோம் அளிவற் குஞ:சர முகவனை
வண்டுபாண் மிழற்றா மலர்கொடுஅர்ச் சித்துத்
தாரியின் மறித்தவன் தனைப்புறங் கண்டு
யாமும் அங்கு அவளை இன்புறப் பெற்றோம்
புகர்முக்க கடவுளை பூசனை புரிந்து
மிகமிக மனதில் விழைந்தன பெற்றார்
இப்புவி தன்னில் எணணுணுதற்கு அரிதால்
அப்படி நீவிரும் அவனைஅர்ச் சித்தால்
எப்பொருள் விரம்பிநீவினர் அப்பொருள் பெறுவீர்
என்றுகன்று எறிந்தேன் எடுத்திசைவ உரைப்ப
அன்றுமுதலர் தருமனும் அனுவரும் இவனைப்
பூசனை புரிந்துகட் புலன் இலான் மைந்தரை
நாசனம் பண்ணி நராதிபர் ஆகிச்
சிந்தையில் நனைத்தவை செகத்தினிற் செயங்கண்டு
அந்தமில் செலட்வத்து அரசியல் பெற்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈங்குஇது நிற்க இவ்விரத்து இயல்
ஓங்கிய பூாதைமற்று ஒன்றுஉரை வெய்வாம்
கஞ்சநாதன் முகன்தரும் காசிபன் புணர்ந்த
வஞ்சக மனத்தாள்மாயைதன் வயிற்றிற்
சூரன் என்று ஒருவனுந் துணைவருந் தோன்றி
ஆர்கலி சூழ்புவி அனைத்தையும் அழித்தே
சீருடைச் சுவர்க்கத் திருவுளங் கெடுத்தும்
புரந்தரன் முதலிய புலவரை வருத்தியும்
நிரந்தரந் தீய நெறிநடத் துதலால்
ஆயிரங் கண்ணனும் அமரரும் முனிவரும்
நிஇரங்கு எமக்குஎன நெடுங்கரங் கூப்பி
இராசத கிரிஉறை இறைவனை வணங்கி
வரமிகுஞ் சூரன் வலிமைகள் உரைக்க
சுடர்விடும் மணிமுடிச் சூரனை வெல்லக
கதிர்விடம் வடிவேல் கரதலத்து ஏந்தும்
புதல்வனைத் தருவோம் போமின் நீர்என
அமரர் கோனுக்கு அரன்விடை கொமுத்துச்
சமர வேல்விழித் தையலுந் தானுந்
கூடிய கலவியற் கூடாது ஊடலும்
ஓடியவனோர் ஒருங்குஉடன் கூடிப்
பாவகன் தன்னை பரிவடன் அழைத்துச்
சூரன் செய்யுந் துயரம் எல்லாம்
ஊர்அரவு அணிந்தோற்கு உரையென உரைப்பக்
காமனை உரித்த கடவுள்என்று அஞ்சிப்
பாவகன் பயமுறப் பயம்உனக்கு ஏதென
ஊற்றிடங் கரதலத்து உன்னையே தரித்தான்
நெற்றியின் நயனமும் நீயே ஆதலிற்
குற்றம்அடாது கூறுநீ வென்றென
வானவர் மொழிய மறறவன் தானுந்
தானும்அச் வபையில் தரியாது ஏகி
எமைஅ ளுடைய உமையா ளுடனே
அமையாது இன்பத்து அமர்ந்துஇனிது இருந்த
பள்ளி மண்டபம் பாசகன் குறுகலுந்
தெள்ளிற் பரமனுந் தேயவைக் கண்டே
ஆறுமுகப் பிள்ளையை அவன்கையில் ஈதலும்
வறியவன் பெற்றற வான்பொருள் போலச்
சோதி நீள்முடிச் சுடரோன் கொணர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாத ராசன் மலர்கையிற் கொடுப்ப
நீதி யோடு நின்றுனை யேந்திப்
போதநிள வாயுவும் பொறுக்கஒண் ணாமல்
தரும்புனற் கங்கை தன்னையிற் கொடுப்பத்
தரும்புனற் கங்கையும் தாங்க தாங்க ஒண்ணாமற்
பொரந்திரைச் சரவணப் பொகையிரல் வைப்பத்
தண்ஆர் வதனத் தாமரை ஆறுங்
கண்ஆ றிரண்டுங் கரம்ஈ ராறும்
தூண்எனத் திரண்ட தோள் ஈராறும்
மாண்அயில் ஆதி வான்படை யுங்கொண்டு
ஆறுமுகக் கடவுள்அங்கு அவதரித் திடலும்
மறுகிய உம்பர் மகிழ்வுடன் கூடி
அறுமீன் களைப்பால் அளித்திர்என்று அனுப்ப
ஆங்கவர் முலைஉண்டு அறுமுகன் தானும்
ஓங்கிய வளர்ச்சி உற்றிடு நாளில்
விமலனம் உமையும் விடையு கைத்து ஆறு
தலைமகன் இருந்த சரவணத்து அடைந்து
முருகுஅலர் குழல்உமை முலைப்பால் ஊட்ட
இருவரும் இன்பால் எடுத்துஎடுத்து அணைத்துத்
தேவர்தம் படைக்குச் சேனா பதியெனக்
காவல் கொண்டு அளிக்க கதிர்முடி சூட்டி
அயில்வேல் முதற்பல ஆயுதங் கொடுத்துத்
திசைஎலாஞ் செல்லுந் தேரும்ஒன்று உதவிப்
பூதப் படைகள் புடைவரப் போய்நீ
ஓதுறும் அவுணரை ஒறுத்திடு என்று அனுப்ப
இருளைப் பருகும் இரவியைப் போல்த்
தகுவரென்று அவரைச் சமரிடை முருக்கிக்
குருகுப் பேர்பெறுங் குன்றமுடுஞ் சூரன்
மருமுந் துளைபட் வடிவேல் விடுத்தே
யாவரும் வியப்புற இந்திரன் மகளாத்
தேவகுஞ் சரியைத் திருமணம் புணர்ந்திட்டு
அமரர் கோனுக்கு அமருலகு அளித்துக்
குமர வேளுங் குவலயம் விளக்க
அமரர் வதியில் அமர்ந்து இனிது இருந்தான்
உண்டருங் கற்பினை இழநத்து கண்டே
அண்டா எல்லாம் அடைவுடன் கூடி
மாதொரு பாகனை வந்துஅடி வணங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருமலர்க் டம்பன்ளம் மாநகர் புகாமல்
அருள்நெய் வேண்டும்நீ அம்பிகா பதியென
இமையவர் உரைப்ப இறையவன் தானுங்
பாவல் கொண்டு எம்வினை கட்டறுத்து அருளுஞ்
சேவலங் கொடியோன்தேசம் போகத்
திருத்திழை உமையாள் அருந்துயர் எய்தி
வருத்திமுன் நிற்க மங்கையைப் பார்த்து
மங்கை நீதான் வருச்துதல் ஒழிகுதி
அங்கையாற் சூதெறிந்து ஆடுவோம் வாவென
வென்றதுந் தோற்றம் விளம்புவார் யாரெனக்
குன்மென் முலையாள் கூறிய சமயம்
புற்றுஅரவு அணிந்த புனிதனைக் காணஅங்கு
உறறன்திருமால் ஊழ்வினை வலியாற்
சக்கிர பாணியைச் சான்றெனக் குறித்து
மிக்கதோர் சூது விருப்புடன் ஆடச்
சாயக நேருந் தடநெடுங் கருங்கண்
நாயகி வெல்ல நாயகன் தோற்ப
இன்பவாய் இதழ்உமை யான்வென் றேன்என
எம்பெரு மானும் யான்வென் றேனன்ன
ஒருவருக்கொருவர் உத்தரம் பெசி
இருவரும் சாட்சி இவனைக் கேட்ப
மாமனை வதைத்த மால்முகம் நோக்கி
காமனை எரித்தோன் கண்கடை காட்ட
வென்ற நாயகி தோற்றாள் என்றுந்
தோற்ற நாயகன் வென்றான் என்றும்
ஒன்றிய பொய்யகரி உடன்அங்கு உரைப்பக்
கன்றிய மனத்தோடு கவுரிஅங்கு உருத்து
நோக்கிநீ இருந்தும் நுவன்றிலை உண்மை
வாக்கினில் ஒன்றாய் மனத்தினில் ஒன்றாய்
மைக்கரி உரித்தோன் வதனம் நோக்கிப்
பொய்கரி உரைத்த புன்ழமயி னாலே
கனல்என வயிற்றுக் கடும்பசி கனற்ற
நிலரமிசைக் குருட்டு நெட்டுடற் பாம்பாய்க்
கடகரி முகத்துக் கடவுள்வீற்று
வடதரு நீழலிற் கிடவெனச் சபித்தாள்
முளரிகள் பூத்த முகில்நீறுத்து உருப்போய்
துளவுஅணி மருமனுந் துணைவிழி இழந்தே
ஆண்டுஅரைக் கணத்தில் ஆயிரம் யோசனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டபைப் பாந்தள் நெட்டுடல் எடுத்து
வளர்மருப்பு ஒன்றுடை வள்ளல்வீற்று இருக்குங்
கிளர்சீசனை ஆலின் கீழ்க்கிடந் தனனால்
திரிதடக்காதியின் திருமுகக் கடவுளும்
திரிகடக் கரியின் திருமுகத் கடவுளும்
வழபடும் அடியார் வல்வினை தீர்த்தே
எழில்பெறு வடமரத் தின்கீழ் இருந்தான்
கம்பா முகத்துக கடவுள்தன் பெருமையை
அம்புவி யோருக்கு அறிவிப் போம்என
உம்பர் உலகத்து ஓரெழு கன்னியர்
தம்பநூல் ஏணியில்தாரணி சந்து
கரிமுகக் கடவுளைக் கைதொழுது ஏத்திக்
கார்த்திகைக் கார்த்திகை கழிந்தபின் நாளில்
ஆர்த்த கலிங்கத்து அணிஜயிழை வாங்கி
இருபத் தோர்இழை இன்புறக் கட்டி
ஒருபோது உண்டி உண்டுஒரு மனமாய்
வேதத்து ஆதிளும் பூமியில் எழுத்தும்
ஆதவி நாயகற்கு ஆன எழுத்தும்
மூன்றுஎழுத் ததனால் மொழிந்தமத் திரமும்
தேன்தருங் குழலியர் சிந்தையுட் செபித்தே
உரைதரு பதினாறு உபசா ரத்தால்
வரைமகள் மதலையை வழிபாடு ஆற்றி
இருபது நாளும் இப்படி நோற்று
மற்றநாள் ஜங்கர மாமுகளன் பிறந்த
அற்றைநாட் சதயமும் ஆறாம் ப்ககமுஞ்
சேரும்அத் தினத்தில் தெளிபுனல் ஆடி
வாரண முகத்தோன் வருபெருங் கோயிலர்
சீர்பெற மெழுகித் திருவிளக்கு ஏற்றித்
குலவுபொற் கலைகள் கொடுவி தானித்து
மலர்பல தொடுத்திடு மாலைகள் ஆற்றிக்
கொலைபுரி வடிவேற் குகற்குமுன் வருகை
மலைமுகக் கடவுளை மஞ்சனம் ஆட்டிப்
பொற்கலை நலநூற் புரந்துகில் சாத்திச்
சொற்பெறு சந்தனச் சுகந்தம் பூசிச்
செருந்தி சண்பகஞ் செங்கழ நீரொடு
குருத்து மல்லிகை கோங்கொடு பிச்சி
கருமுகை புன்ரனை கடிகழல் பாதிரி
மருவிரி ஞரில் மகிழ்இரு வாட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமரை முல்லை தளைஅவிழ் கொன்றை
பூமலர் நொச்சி பூத்தமைக் குவளை
காந்தள் ஆத்தி கடம்புசெவ் வந்தி
வாய்ந்தநல் எருக்கு மலர்க்கர விரம்
பச்சிலை நொச்சி படர்கொடி அறுகு
முத்தளக் கூவிளம் முதலிய சாத்திக்
தூபதீ பங்கள் சுகம்பெறக் கொடுத்தே
அப்பம் மோதகம் அவல்எள் ளுருண்டை
முப்பழந் தேங்காய் முதிர்மொளிக் கரும்பு
சீனிதேன் சக்கரை செவ்விள நீருடன்
பால்நறு நெய்தயர் பருப்புடன் போனங்
கற்பகத் கடவுள் களித்திடத் திருமுன்
பொற்புறப் படைத்துப் பூசணை பண்ணி
நோற்பது கண்டு நோகலாகாது இருந்த
பாப்புரு வாகிய பஞ்சா யுதனும்
யாப்புறு கொங்கையீர் யானும்நோற் பேனேன
ஆங்குஅவன் தனக்கும் வேண்டுவது அளித்துப்
பாங்கொடுஇவ் விரதம் பரிந்துநோற் பித்தார்
அண்டர்நா யகனாம் ஐங்கரன் அருளால்
விண்டுவும் பண்டுஉள வேடம் பெற்றே
உஞ்ஞைமா நகர்புகுந்து உமையொடு விமலன்
கஞ்சநாள் மலர்பாதங் கைதொழு திடலும்
பஞ்சிமென் சிறிடிப் பார்ப்தி நெஞ்சின்
வெஞ்சினட் மிகுந்து விமலனை நோக்கி
யான்இடுஞ் சாபம் நீங்கியது ஏனென
மானெடுங் கண்ணி மணிக்கதவு அடைப்ப
இறையவன் இதற்குக் காரணம் ஏதென
பிறைமருப்பு ஒன்றுடைப் பிள்ளைஅன்று எனக்குத்
தந்தருள் புரிந்த தவப்பயன் ஈதெனச்
சிந்தை மகிழ்து தேவர் தேவனும்
பூங்கொடி அடைத்த பொன்தாழ் நீங்கச்
சாங்குமன் உரைத்த சக்கர பாணி
இக்கதை சொல்ல அக்கணி வடையனும்
மிக்கநல் வழிரதம் விருப்புடன் நோற்றபின்
மாதுமை அடைந்த வன்தாழ் நீக்கி
நாதனை நணுகிட நம்பனும் நகைத்தான்
நானோ வந்து நகையா னதுஎனத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன்நேர் தெமாழியாள் தெளியக் கூறென
நன்மதி நுதலாய் நானிலந் தனினல்
உன்மகன் நோன்பின் உறுதி அறிந்து
சிந்தை மகிழ்ந்து விரித்தேன் யானென
அந்தமில் அரனை ஆயிழை வணங்கிப்
பொருஞ்சுழீர் அறவேல் போக்கிய குமரன்
வரும்படி யானும் வருந்திநோற் பேனென
இறையவன் கதைசொால ஏந்திழை நோற்பின்
குறமட மனளைக் குலமணம் புணர்ந்தோன்
சுடர்வடி வேலொன் தொல்வினை தீர்ந்து
தாதுமை வண்டுஉழுந் தாமத் தாமனை
மாதுமை யதளை வந்துகண் டனனே
கண்ணநீ கண்ணில்லாக் கட்செவி யாகெனத்
தண்நறுங் குழல்உமை சாபம்இட் டதுவும்
அக்குநீறு அணியும் அரன்முதல் அளித்த
விக்கின் விநாயக விரதம்நோற்று தென்பின்
சுடர்க்கதை ஏந்துந் துளவ மாலையன்
விடப்பபணி உருவம் விட்டுநீங் கியதும்
பரிவுகொள் கூத்துடைப் பரமனும் நோற்றுக்
கவுரிஅன்று அடைத்த கபாடத் திறந்ததும்
வாசமென் குழலுடை மாதுமை நோற்பத்
தேசம் போகிய வெச்வேள் வந்ததும
வானவர் நோற்று வரங்கள் பெற்றதும்
நாரத முனிவன் நவின்றிடக் கேட்டே
இந்நிலந் தன்னில் இவ்விர தத்தை
மன்னவன் வச்சிர மாலிமுன் தீர்ந்து
மாருயிரும் புவியின் மன்னாய் வாழ்ந்து
தடமுலைத் திலோத்தமை தனைமணம் புணர்ந்து
மழவிடை போற்பல மைந்தரைப் பெற்றுக்
கடைமுறை வெள்ளியங் கயிலையில் உற்றான்
பரிவொடுஇவ் விரதம் பாரகந் தன்னில்
விரைகமழ் நறுந்தார் விக்கிரமா தித்தன்
மறிகடற் புவிபெற வருந்தி நோற்றிடுநாள்
மற்றவன் காதன் மடவரால் ஒருத்தி
இற்றிடும் இடையாள் இலக்கண சுந்தரி
மெத்தஅன் புடன்இவ் விரதம்நோற் பேனென
அந்தந் தன்னில் அணியிழை செறிந்துச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தம் மகிழ்ந்து சிலநாள் நோற்றபின்
உற்ற நோன்பின் உறுதி மறந்து
கட்டிய இழைழயக் காரிகை அவிழ்த்து
வற்றிய கொவ்வையின் மாடே போட
ஆங்குஅது தழைத்தே அலருந் தளிருமாய்ப்
பாங்குற ஓங்கிப் படாவது கண்டு
வேப்பஞ் சேரியில் போய்ச்சிறை இருந்த
அவ்வியம் அல்லாள் அவ்விடந் தன்னிற்
கொவ்வை அடகு கொய்வாள்
குறுகி இழையது கிடப்பக் கண்டுஅவள் எடுத்துக்
குழைதவிழ் பவரிவிழிக் கோதைகைக் கட்டி
அப்பமோடு அடைக்காய் அவைபல வைத்துச்
செப்பமுடனே திருத்திழை நோற்றிடக்
கரிமுத்து அண்ணல் கருணை கூர்ந்து
பண்டையிஜல் இரட்டி பதம் அவர்கட்கு அருளக்
கொண்டுபோய் அரசனுங் கோயிலுள் வைத்தான்
விக்கிரமா தித்தான் விழிதுயில் கொள்ள
உக்கிர மானஉடை மணிக்ட்டித்
தண்டையுஞ் சிலம்புந் தாளினின்று ஒலிப்பக்
கொண்டல் போல்வருஞ் குஞ்சர முகத்தோன்
மனமிகக் கலங்கும் மன்னவன் தன்னிடங்
கனவினில் வந்து காரண மாக
இரக்கண சுந்தரி இம்மனை இருக்கிற்
கலக்கம் வந்திடுங் கழித்திடு புறந்தெனத்
துண்ணெண எழுந்து துணைவியை நோக்கி
கண்ணுறங்க கண்ட கனவின் காரணம்
அண்ணல் உரைத்திடும் அவ்வழி தன்னில்
ஆனை குதிரை அவைபல மடிவுற
மாநகர் கேடுறும் வகையது கண்டு
இமைப்பொழுது இவள்இங்கு இருக்கலா காதுஎன
அயற்கடை அவனும் அகற்றிய பின்னர்
வணிகன் தனது மனைபுகுந்து இருப்ப
மணியும் முத்தும் வலியகல் லாய்விட
அணியிழை தன்னை அவனும் அகற்ற
உழவர்தம் மனையில் உற்றுஅவள் இருப்ப
வளர்பயிர் அழிந்து வளம்பல குன்ற
அயன்மனை அவரும் அகற்றிய பின்னர்க்
குயவன் மனையிற் கோற்கொடி செல்லக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குயக்கலம் அடைந்து கொள்கை போக
அயற்கடை அவனும் அகற்றிய பின்னர்
தூசுதூய் தாக்குந் தொழிலோர் மனைபுகத்
தூசுகள் எல்லாந் துணிந்துவே றாகப்
தூசரும் அவளைத் தூரஞ் செய்ய
மாலைக் காரன் வளமனை புகலும்
மாலை பாம்பாம் வகையது கண்டு
ஞாலம் எல்லாம் நடுங்கவந்து உதித்தாய்
சாலவும் பாவிநீ தான்யார் என்ன
வெம்மனம் மிகவம் மேவி முனிவுறா
அம்மனை அவனும் அகற்றிய பின்னர்
அவ்வை செலர்லும் அகங்கள் தோறும்
வைதனர் எறிந்தனர் மறியத் தள்ளினர்
கைகொடு குற்றினர் கண்டோர் பழித்தனர்
அவ்வவை மீண்டுதன் அகமதிற் சென்று
இவ்வகைக் கன்னிநீ யாரென வினாவக்
காத்தாண்டு உலகு கருணையோடு ஆண்டு
மார்த்தாண்ட ராசன் மாமகள் ஒருத்தி
எல்லார்க்கும் மூத்தாள் இலக்கண சுந்தரி
சொல்லுவிக் கிரம சூரியன் மனையெனச்
சீர்கெட இருந்த தெரிவையை நோக்கி
நீரது கொண்டு நிலம்மெழு கிடுகெனச்
சாணி எடுக்கத் தையலுஞ் சென்றாள்
சாணியும் உழுத்துப் தண்ணீர் வற்றிப்
பேணிய புழுவாய் பெரிது தோன்ற
மான்நேர் விழியாள் வருந்துதல் கண்டு
தானே சென்று சாணி எடுத்துத்
தண்ணீர் கொணர்ந்து தரைமெழுகி கிட்டு
மண்ணிய விட்டில் மணிவிளக்கு ஏற்றிப்
புத்தகம் எடுத்தது வாவெனப் புகலப்
புத்தகம் பாமபாய்ப் பொருந்தி நின்று ஆட
மெத்தஉள் நடுங்கி வீழ்ந்துஅவள் கீடப்பக்
கொவ்வையங் கோதையை விலக்கி
அவ்வை தானே அகமதிற் சென்று
புத்தகம் எடுத்துப் பொருந்தப் பார்த்து
வித்தக நம்பி விநாயக மூர்த்தி
கற்பகப் பிள்ளைசெய் காரியம் அதுவென
உத்தமி அவ்வை உணர்ந்துமுன் அறிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவநெறி பிழைத்த தையலை நோக்கி
நுவலரும் விநாயக நோன்புநோற் றிடுகென
கரத்து மூஏழுஇழைக் காப்புக் காட்டி
அப்பமும் அவலும் மாம்பழ பண்டமுஞ்
செப்பம தாகத் திருமுன் வைத்தே
அவ்வை கதைசொல ஆயயிழை கேட்டு
மத்தக்க களிற்றின் மகாவிர தத்தை
வித்தக மாக விளங்குஇழை நோற்றுக்
கற்பக நம்பி கருணைபெற்தன் பின்
சக்கர வாள சைனியத் தோடு
விக்கிரமா தித்தன் வேட்டையிற் சென்று
தானுஞ் சேனையுந் தண்ணீர் விரும்பி
எவ்வகை செய்வோம் எனஉளம் மெலிந்தே
அவ்வகை தன்மனை அங்குஅவர்அணுக
எய்துந் தாகமும் இளைப்புங் கண்டு
செவ்வே அவற்றைத் தீர்க்க எண்ணி
இலக்கண சுந்தரி என்பவள் தன்னனை
அப்பமும் நீரம் அரசற்கு அருளெனச்
செப்பிய அன்னை திருமொழிய படியே
உண்நீர்க் கரகமும் ணருபணி காரமும்
பண்நேர் மொழியாள் பார்த்திபத்திற்கு உதவ
ஒப்பறு படையும் உயர்படை வேந்தனும்
அப்பசி தீர அருந்திய பின்னர்
ஆனை குதிரை அவைகளும் உண்டுந்
தானது தொலையாத் தன்னையைக் கண்டே
இவ்வகை சமைத்தநீ யாரேன வினவ
மவ்வல்அம் குழலால் மௌனமாய் நிற்ப
அவ்வை தான்சென்று அரசற்கு உரைப்பாள்
கணபதி நோன்பின் காரணங் காண்இது
குணமுடை இவள்உன் குலமனை யாட்டி
இலக்கண சுந்தரி என்று அவ்வை கூற
மங்கையை நோக்கி மனமிக மகிழ்ந்து
திங்கள்நேர் வெள்ளிச் சிவிகையில் ஏற்றி
கொண்டுஊர் புகுந்தான் கொற்ற வேந்தனும்
ஒண்தொடி யாரில் உயாபதம் உதவினன்
சிந்துர நுதலார் சென்றுஅடி பணியச்
சுந்தரி யிருந்தாள் சுகத்துடன் மகிழ்ந்தே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பு

கரும்பும் இளநீருங் காரெள்ளுந் தேனும்
விரும்பும் அவல்பலவும் மேன்மெல் - அருந்திக்
குணமுடை னாய்வந்து குற்றங்கள் தீர்க்குங்
கணபதியே இக்கதைக்கு காப்பு.

திருவிளக்கு மான்மருகா சேவதனில் ஏறி
வரும்அரன்தான் ஈன்றருள மைந்தா - முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவா உனைத்தொழுவேன்
என்கதைக்கு நீயென்றுங் காப்பு.

நூற்பயன்

பொன்னுமிகும் கல்விமிகும் புத்திரரோடு எப்பொருளும்
மன்னும் நவமணியும் வந்துஅணுகும் - உன்னி
ஒருகொம்பின் யானை முக உத்தமனார் நோன்பின்
திருக்கதையைக் கேட்ச் சிறந்தது.

பொற்பணைக்க ம்ககண் புகர்முகத்துப் பொன்மவுலிக்
கற்பகத்தின் நோன்பின் கதைதன்னைச் - சொற்பெருகக்
கற்றவரும் நோற்றவருங் காதலித்து கேட்டவரும்
பெற்றிடுவர் கற்பகத்தின் பேறு.

வெள்ளை எருதுஏறும் விரிசடையோன் பெற்றுஎடுத்த
பிள்ளையார் நோன்பின் பெருங்கதையை - உள்ளபடி
நோற்றார் மிகவாழ்வார் நோகலாது அருகுஇருந்து
கேட்டோர்க்கும் வாராது கேடு.

சூலிலார் நோற்கிற் சுதரை மிகப்பெறுவர்
சாலமிகும் வெங்கலியார் தாம்நோற்கில் - மேலைப்
பிறப்பு எல்லாம் நல்ல பெருஞ்செல்வம் எய்திச்
சிறப்பிலே வாழ்வார் சிறந்தது.

பிள்ளையார் கதை முற்றுப்பெற்றது.
திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம்சாவழி

மாலாண முதலியார் வழி
நாகநாதர் மாணிக்கர்
+
சின்னத்தங்கம்

- கந்தசாமிப்பிள்ளை + மனோன்மணி
  - இரத்தினேஸ்வரி
  - யோகேஸ்வரி
  - விக்கினேஸ்வரா
  - விக்கினராஜேஸ்வரன்
- தங்கம்மா + வைத்திலிங்கம்
  - சிவலிங்கம்
  - தவமணிதேவி
  - இராஜேஸ்வரி
  - அன்னலிங்கம்
  - இரஞ்சிதமலர்
  - காசிலிங்கம்
  - கனகலிங்கம்
  - சத்தியதேவி
  - சறோஜாதேவி
  - கணேசலிங்கம்
  - வசந்தாதேவி
- இராசையா

மண்ணாடுகொண்ட முதலியார் வழி
கந்தையா பொன்னம்பலம்
+
வள்ளிப்பிள்ளை

- தெய்வானைப்பிள்ளை + சுந்தரமூர்த்தி
  - புஸ்பராணி
  - வில்வராணி
  - திருக்கேதீஸ்வரன்
  - அருள்மொழிராணி
  - புஸ்பலீலாவதி
  - கிருஸ்ணலீலாவதி
  - கலாநிதி
- கந்தையா + பரமேஸ்வரி
  - குகதாசன்
  - கருணாவதி
  - மோகனதாசன்
  - கலாவதி
  - முருகதாசன்
- சுந்தரவல்லி

இராசையா + சுந்தரவல்லி

திருஞானசம்பந்தமூர்த்தி
(சம்பந்தன்)
+
சுமதி

- சுலோசன்
- அனுஜன்
- கிருத்திகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி நவிலல்

எங்கள் தகப்பனார் மாணிக்கம் இராசையா அவர்கள்
சிவபதமடைந்த செய்தி கேட்டு, தொலைபேசியிலும் நேரிலும்
ஆறுதல் தெரிவித்த அனைத்து உள்ளங்களுக்கும்,
ஈமச்சடங்கின்போது நேரில் வந்து கலந்து கொண்ட உற்றார்,
உறவினர், நண்பர்களுக்கும், அனுதாபச்செய்திகள் அனுப்பிய
அபிமானிகளுக்கும், அந்தியேட்டியின்போது சமூகமளித்துச்
சிறப்பித்து, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்த
அனைத்து உள்ளங்களுக்கும்,
இம்மலரை அழகுற அச்சிட்டுத்தந்த
ஜே ஆர் அச்சகத்தினருக்கும்,
எமது குடும்பத்தின் சார்பில் உளங்கனிந்த
நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

அன்புடன்
மகன், மருமகள், பேரப்பிள்ளைகள்

Printed by JR PRINT Web:www.jrprint.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org